Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**
Defence
Court

| | |
|---|---|
| Name | **முருகன்** |
| Father's name | **கிருஷ்ணசாமி** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை** 1. நான் முத்தரசன்குப்பம் கிராமத்தில் குடியிருந்து, விவசாய கூலி வேலை செய்து வருகின்றேன். ஜெகதீசன் எனது அண்ணன் மகன். முதல் எதிரி நதியா ஜெகதீசனின் மனைவி. ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். ஆஜர் எதிரிகளில் 2ம்

எதிரி கீழ்மாம்பட்டு கிராமத்தை சேர்ந்தவர். முதல் எதிரி நதியா புதுப்பாளையத்தை சார்ந்தவர். கடந்த 18.09.2021 அன்று இறந்துபோன ஜெகதீசன் என்பவரின் மகன் சரவணன் என்பவர் என் மகன் வாசுதேவன் என்பவருக்கு, மாலை சுமார் ஐந்து மணி அளவில் போன் செய்து, தன் தந்தையார் ஜெகதீசன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். என் மகன் அப்போது என்னுடன் தான் இருந்தான். எங்கள் ஊரிலிருந்து இறந்துபோன ஜெகதீசன் வசித்து வந்த புதுப்பாளையம் கிராமம் சுமார் 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் தகவல் தெரிந்தவுடன் உடனடியாக புறப்பட்டு சுமார் பத்து, பதினைந்து நிமிடத்திற்குள் அங்கு சென்றுவிட்டேன். ஜெகதீசனின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, வீட்டில் நடு ரூமில் முன்தலையிலும், தலையிலும் காயங்களுடன் ரத்தத்துடன் ஜெகதீசன் இறந்துகிடந்தார். அருகில் ஒரு மண்வெட்டியும், ஒரு கோடாரியும் இருந்தன. நான் பக்கத்தில் சென்று ஊர்க்காரர்களான கிருஷ்ணமூர்த்தி மற்றும் இதர நபர்களையும், என்ன நடந்தது என்று விசாரித்தேன். அப்போது அவர்கள் என்னிடம், தண்டல்காரர் கோவிந்தராசு (2 வது எதிரி) காலை பதினோரு மணிக்கு நதியா வீட்டிற்கு சென்றதாகவும், இரண்டு, மூன்று மணி நேரம் அங்கு இருந்துவிட்டு, 2 ம் எதிரி கோவிந்தராசு புறப்பட்டு சென்றுவிட்டதாகவும், சொன்னார்கள். அதன்பிறகு நான் தகவலை போலிசாருக்கு தெரிவித்தேன். போலிசார் ஜெகதீசனின் வீட்டிற்கு வந்தார்கள். பிணத்தை 108 ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு, நான் காவல்நிலையம் சென்று, இச்சம்பவம் தொடர்பாக அன்றிரவு 09.30 மணிக்கு புகார் கொடுத்தேன். காடாம்புலியூர் காவல்நிலையத்திற்கு வந்திருந்த ஒரு நபரின் உதவியுடன் நான் புகாரை எழுதி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். இச்சம்பவம் தொடர்பாக நான் அளித்த புகார் அதசாஆ 1 ஆகும். மறுநாள் காலை 10.30 மணி அளவில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சென்று, டாக்டரை பார்த்தேன். போஸ்ட்மார்ட்டம் செய்த பிறகு பாடியை என்னிடம்

ஒப்படைத்தார்கள். அங்கு என்னை போலிசார் விசாரித்தார்கள். இந்த விவரங்கள் தொடர்பாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. நான் நான்காம்வகுப்பு வரை படித்துள்ளேன், அதிகமாக படிக்கவில்லை. நான் காவல்நிலையத்தில் அளித்த புகாரில் கையெழுத்து மட்டுமே என்னுடையது என்றால் ஆமாம், வேறு ஆள் தான் புகாரை எழுதினார். எழுதி என்னிடம் படித்துகாட்டினார். என் மகனுக்கு தகவல் சொன்னதாக நான் சாட்சியமளித்துள்ள நிலையில், அன்றைய தினம் என் மகனும் என்னுடன் ஜெகதீசன் வீட்டிற்கு வந்தாரா என்றால் வந்திருந்தார். என் மகன் வாசுதேவன் போலிஸ்க்கு தகவல் தெரிவித்தார் என்றால் இல்லை, நான் தான் தகவல் தெரிவித்தேன். போலிசார் தான் சடலத்தை வீட்டிலிருந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றால் ஆமாம். சாட்சி தானாக, அந்த சமயத்தில் நானும் உடனிருந்தேன். புதுப்பாளையத்திற்கும், காடாம்புலியூர் காவல்நிலையத்திற்கும் இடையே எத்தனை கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால், நான்கு அல்லது ஐந்து கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் சடலத்தை பார்த்தவுடன் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவேண்டும் என்று தோன்றவில்லையா என்றால், தோன்றியது, அதனால் தான் போலிஸ்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். 3. சம்பவம் நடைபெறுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துபோன ஜெகதீசனும், முதல் எதிரி நதியாவும் என் வீட்டிற்கு பக்கத்தில் தான் குடியிருந்தார்கள் என்றால், ஆமாம். என் வீட்டிற்கு பக்கத்தில் முதல் எதிரியும் ஜெகதீசனும் குடியிருந்தபோது, நான் அவர்களிடம் தொடர்ச்சியாக சண்டை வளர்த்துக்கொண்டிருந்தேன் என்றும், அதனால் தான், அவர்கள் அங்கிருக்க முடியாமல், புதுப்பாளையத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால், மறுக்கிறேன். சாட்சி தானாக, முதல் எதிரி நதியாவும், அவரது அம்மாவும் அங்கு சாராயம்

விற்றுக்கொண்டிருந்தார்கள், ஜெகதீசனும் சாராயம் விற்றுக்கொண்டிருந்தார். அதனால் தான் எங்கள் ஊரிலிருந்து சென்று புதுப்பாளையத்தில் முதல் எதிரி நதியா பெரிய அளவில் சாராயம் விற்க ஆரம்பித்தார். முதல் எதிரி எந்த சூழ்நிலையிலும் சாராயம் விற்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், நான் இவ்வழக்கில் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. கடந்த 2021 ஆம் ஆண்டு வாக்கில், எனக்கும், என் அண்ணன் பன்னீர்செல்வத்திற்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றும், அவர் சென்னையில் வசித்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எங்களுக்குள் பேச்சுவார்த்தை இருந்தது. புகார் எத்தனை பக்கம் எழுதப்பட்டுள்ளது என்றால், மூன்று பக்கமா அல்லது நான்கு பக்கமா என தற்போது எனக்கு நினைவில்லை. நான் அன்று பதற்றத்தில் இருந்தேன். புகாரை யார் எழுதினார்கள் என குறிப்பாக கூற முடியுமா என்றால், ராஜசேகர் என்பவர் எழுதினார், அவர் தற்போது உயிருடன் இல்லை. புகாரில் எழுதியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் எனக்கு படித்து காண்பித்தார். என் அண்ணனின் முதல்மனைவி இறந்துவிட்டதால், அவர் தனது இரண்டாவது மனைவியுடன் சென்னையில் வசிக்கிறார் என்றும், அவருக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், புகாரில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என் மகன் வாசுதேவனுக்கு வயது என்ன என்றால் 30 வயது. அவர் படித்துள்ளாரா என்றால் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறார்.

4. என் மகன் வாசுதேவனுக்கும் முதல் எதிரிக்கும் தவறான உறவு இருப்பதாக நான் சந்தேகப்பட்டு, என் மகன் வாசுதேவனையும், முதல் எதிரியையும் நான் பலமுறை

திட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. ( Subject to admissibility, this question and answer was recorded).( 2 ம் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முதல் எதிரி அளித்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வினாவினை தொடுத்ததாகவும், முதல் எதிரிக்கு எதிரான வகையில் இவ்வினா அமையவில்லை என்றும், விளக்கமளித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்படுகிறது).

5. எங்களுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக முதல் எதிரி முத்தரசன்குப்பத்தை விட்டு புதுப்பாளையத்திற்கு வந்து விட்டார் என்றும், நான்கு ஆண்டுகளாக எங்கள் குடும்பத்திற்கும் அவர்கள் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றும், இச்சூழ்நிலையில் முதல் எதிரி மகன் சரவணன் என் மகன் வாசுதேவனுக்கு போன் செய்து தகவல் கூறியதாக நான் அளித்துள்ள சாட்சியம் முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல. இறந்துபோன ஜெகதீசனுக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர் என்றால் சரிதான். இரண்டு மகன்களும், மகளும் முதல் எதிரியுடன் வசித்து வந்தனர் என்றால் சரிதான்.

6. எத்தனை மணிக்கு என் மகன் வாசுதேவனுக்கு தகவல் வந்தது என்றால், மாலை ஐந்து மணிக்கு தகவல் வந்தது. முத்தரசன்குப்பத்திலிருந்து நான் புதுப்பாளையத்திற்கு நடந்து சென்றேனா என்றால் இல்லை, மோட்டார் சைக்கிளில் சென்றேன். பத்து நிமிடத்திற்குள் சென்றுவிடலாமா என்றால் சென்றுவிடலாம். நான் புதுப்பாளையத்தில் ஜெகதீசன் வீட்டிற்கு செல்வதற்கு முன்பாகவே 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்து சென்றுவிட்டது என்றால் ஆமாம். பண்ருட்டி ஜி எச் -லிருந்து வேறு ஆம்புலன்ஸ் மூலம் நான் ஜெகதீசன் சடலத்தை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு காடாம்புலியூர் போலிசார் தகவல் சொல்லிய பிறகு தான் ஆம்புலன்ஸ் வந்து சடலத்தை முண்டியம்பாக்கம் அரசு

மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டது என்றால் சரிதான். சுமார் நான்கைந்து போலிசார் வந்துவிட்டார்களா என்றால் பத்து போலிசார் அளவிற்கு வந்துவிட்டார்கள். டிஎஸ்பி, ஆய்வாளர், எஸ் ஐ எல்லோரும் வந்துவிட்டார்கள். நான் செல்வதற்கு முன்பாகவே டி எஸ்பி யும், ஆய்வாளரும் இருந்தார்களா என்றால் இல்லை, நான் சென்ற பிறகு தான் போலிசார் வந்தார்கள். போலிசார், டிஎஸ்பி மற்றும் ஆய்வாளர் வரும்போது நேரம் மாலை ஐந்து மணி இருக்குமா என்றால் ஐந்தரை அல்லது ஐந்தேமுக்கால் மணிக்கு மேல் இருக்கும். நான் அளித்த புகாரிலும் போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்திலும், 2 ம் எதிரி கோவிந்தராசு சம்பவ தினத்தன்று முதல் எதிரி நதியாவின் வீட்டில், இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இருந்ததாக, நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு எந்த விவரங்களும் தனிப்பட்ட முறையில் தெரியாமல், போலிசார் முன்னிலையில் தயார் செய்யப்பட்ட ஒரு தவறான புகாரில் நான் கையொப்பம் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் மகன் வாசுதேவன் கார் வைத்து, வாடகைக்கு கார் ஓட்டி வருகிறார். என் மகன் வாசுதேவனுக்கு அன்றைய தினம் போன் மூலம் சரவணன் தகவல் சொல்லியதாகவும், அந்த சமயம் நான் அங்கு இருந்ததாகவும், நான் அளித்துள்ள சாட்சியம் தவறானது என்றும், என் மகன் வாசுதேவனுக்கு எந்த தகவலும் அளிக்கப்படவில்லை என்றும், நான் அந்த சமயம் அங்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனின் செல்போன் எண்ணை கூற முடியுமா என்றால், என் செல்போனை பார்த்தால் தான் அந்த எண்ணை கூற முடியும். 18.09.2021 வாக்கில் என்னிடம் செல்போன் இருந்ததா என்றால் இருந்தது. என் செல்போன் எண்ணுக்கு அன்றைய தினம் தகவல் வந்ததா என்றால் இல்லை. என் செல்போன் நம்பர் அவர்களிடம் இல்லை. நான் கிருஷ்ணமூர்த்தியை விசாரித்ததாகவும், அவர் எனக்கு சம்பவம் தொடர்பாக சில தகவல்களை கூறியதாகவும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | ரமேஷ் |
| Father's name | ராமலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை** 1. நான் வடக்கு மேலூர் கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன்., நான் என் எல் சி நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்து வருகின்றேன். ஜெகதீசன் எனது மனைவியின் அண்ணன். ஆஜர் எதிரிகளில் முதல் எதிரியை தெரியும். முதல் எதிரி

நதியா எனது மைத்துனர் ஜெகதீசனின் மனைவி. எனது மைத்துனர் ஜெகதீசன் ஆரம்பத்தில் முத்தரசன்குப்பத்தில் வசித்து வந்தார். கடந்த நான்கு ஆண்டுகளாக புதுப்பாளையம் கிராமத்திற்கு குடித்தனம் மாற்றி வந்துவிட்டார். கடந்த 18.09.2021 அன்று மாலை ஐந்தரை மணிக்கு, எனது உறவினர் வாசுதேவன் எனக்கு போன் செய்து, என் மச்சான் ஜெகதீசன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் நெய்வேலியிலிருந்து ஐந்தேமுக்கால்மணிக்கு புறப்பட்டு, அன்று மாலை 06.30 மணி அளவில் புதுப்பாளையம் கிராமத்திற்கு வந்தேன். நான் ஜெகதீசன் வீட்டிற்கு சென்றபோது, வீட்டின் ஹாலில் ஜெகதீசன் இறந்துகிடந்தார். அவரது உடலில் காயங்கள் காணப்பட்டன. முதலில் தூர இருந்து பார்த்தபோது, தலையில் முன்பகுதியில் ஒரு காயமும், அவரது தலைக்கு அருகில் தரையில் ரத்தமும் காணப்பட்டது. நான் சென்ற பத்து நிமிடத்தில் அமரர் ஊர்தி வந்தது. ஜெகதீசனின் சடலத்தை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். நான் அங்கு சென்றபோது, அசா 1 முருகன், வாசு, சோமசுந்தரம் ஆகியோரும், முத்தரசன்குப்பத்தை சேர்ந்த எனக்கு தெரியாத நபர்களும் அங்கிருந்தார்கள். அன்றிரவு 09.30 மணிக்கு அசா 1 முருகன் காடாம்புலியூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். மறுநாள் காலையில் வருமாறு எங்களை அனுப்பிவிட்டார்கள். மறுநாள் காலை நான் காவல்நிலையம் சென்றேன். அங்கு எங்களை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை சென்ற பிறகு அங்கு என்னிடம் இறந்துபோன ஜெகதீசனை பற்றி காடாம்புலியூர் போலிசார் விசாரித்தார்கள். ஜெகதீசனின் மரணம் குறித்து எனக்கு தெரியாது. இந்த விவரங்கள் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

2. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்கள் தரப்பில் குறுக்குவிசாரணை ஏதுமில்லை என தெரிவித்தார்கள். அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.3**
Defence
Court

| | |
|---|---|
| Name | **கிருஷ்ணமூர்த்தி** |
| Father's name | **சொக்கலிங்கம்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல்விசாரணை</u>** 1. நான் புதுப்பாளையத்தில், கிழக்கு தெருவில் குடியிருந்து, விவசாய கூலி வேலை செய்து வருகின்றேன். அசா 1 முருகன் மற்றும் அசா 2 ரமேஷ் ஆகியோர் எங்கள் ஊர்க்காரர்கள் அல்ல. ஆஜர் எதிரிகளை தெரியும். முதல் எதிரி பெயர் நதியா. 2 வது

எதிரியின் பெயர் தெரியாது. இறந்துபோன ஜெகதீசனை தெரியாது. இரண்டு வருடத்திற்கு முன்பு, ஜெகதீசன் இறந்த சமயத்தில் நான் ஊரில் இல்லை. அன்றிரவு ஏழு மணிக்குத்தான் நான் ஊருக்கு வந்தேன். நான் வந்தபோது அங்கு ஒரே கூட்டமாக இருந்தது. அதனால் ஜெகதீசன் இறந்தவிவரத்தை தெரிந்துகொண்டேன்.

**(இந்நிலையில், சாட்சியை கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. என் வீட்டிற்கும் ஜெகதீசன் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் குறுக்கே வந்தால் 150 அடி. சுற்றி வந்தால் 200 அடிக்கு மேல் இருக்கும். எங்கள் வீட்டின் பின்பகுதியிலிருந்து பார்த்தால் ஜெகதீசனின் வீடு தெரியும். 18-09.2021 அன்று நான் எங்கு இருந்தேன் என்றால், காலை பத்து மணிக்கு புறப்பட்டு பண்ருட்டிக்கு சென்றுவிட்டேன். இருசக்கர வாகனத்தில் சென்றேன். இறந்துபோன ஜெகதீசனுக்கும் முதல் எதிரி நதியாவிற்கும் இடையே உறவு நிலை எப்படி இருந்தது என்றால், அவர்(ஜெகதீசன்) அடிக்கடி அந்த வீட்டில் இருக்கமாட்டார். எப்போதாவது தான் இருப்பார். சென்னையில் வண்டி ஓட்டி கொண்டு இருந்ததாக தெரிந்துகொண்டேன். எனக்கு அவரிடம் பேச்சுவார்த்தை இல்லை. ஜெகதீசனுக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது.

3. போலிஸ் விசாரணையில் நான், கடந்த 18.09.2021 அன்று காலை சுமார் பத்து மணி அளவில் ஜெகதீசனுக்கும் நதியாவிற்கும் சண்டை நடந்தது என்றும், பிறகு தண்டல்காரர் கோவிந்தராசு (2ம் எதிரி), ஜெகதீசன் வீட்டிற்கு வந்துவிட்டு போனதாகவும், பின்னர் சிறிது நேரம் கழித்து பதினோரு மணி அளவில் மீண்டும் கோவிந்தராசு வெள்ளைவேட்டி , சட்டை அணிந்து ஜெகதீசன் வீட்டிற்குள் சென்றதாகவும், அரைமணி

நேரம் கழித்து சுமார் 11.30 மணி அளவில் ஜெகதீசன் வீட்டில் இருந்து, ஜெகதீசனின் அலறல் சத்தம் கேட்டதாகவும், உடனே நானும் என் மனைவி சாந்தியும், ஜெகதீசன் வீட்டிற்கு சென்று பார்த்ததாகவும், என்ன சத்தம் என்று நதியாவிடம் கேட்டதாகவும், அதற்கு நதியா இது சாதாரணமான கணவன் மனைவி சண்டைதான் என்று சொன்னதாகவும், நதியா தன் வீட்டு கதவை மூடிக்கொண்டதாகவும், பின்னர் நானும் என் மனைவியும் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், அதன்பின்னர் அரைமணி நேரம் கழித்து, 2 ம் எதிரி கோவிந்தராசு வேறு வேஷ்டி மற்றும் கட்டம் போட்ட சட்டை அணிந்து, தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு ஜெகதீசன் வீட்டிலிருந்து பதற்றமாக வெளியே வந்து, மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டதாகவும், பின்னர் மாலை 05..00 மணிக்கு நதியா வீட்டிற்கு 108 ஆம்புலன்ஸ் வந்ததாகவும், அப்போதுதான் எனக்கு ஜெகதீசன் ரத்த காயத்துடன் இறந்து கிடக்கிறார் என்ற தகவல் தெரிய வந்ததாகவும், பின்னர் ஆறரை மணி அளவில் ஜெகதீசனின் உறவினர்கள் அவர் வீட்டிற்கு வந்ததாகவும், பின்னர் ஜெகதீசன் மரணம் சம்மந்தமாக ஜெகதீசனின் சித்தப்பா காடாம்புலியூர் காவல்நிலையத்தில் இரவு சுமார் 09.30 மணி அளவில் புகார் அளித்ததாகவும், அப்போது நானும் உடனிருந்தேன் என்றும், மறுநாள் 19.09.2021 அன்று காலை 09.00 மணி அளவில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் ஜெகதீசனின் பிரேதத்தின் மீது நடந்த விசாரணையில் நான் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த வேறு காரணங்களுக்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

2. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்கள் தரப்பில் குறுக்குவிசாரணை ஏதுமில்லை என தெரிவித்தார்கள். அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**
Defence
Court

| | |
|---|---|
| Name | சரவணன் |
| Father's name | ஜெகதீசன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 20 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை** 1. எனது சொந்த ஊர் முத்தரசன்குப்பம். நான் தற்போது எனது பாட்டி சுலோச்சனாவுடன், நெய்வேலியில் மூன்றாவது பிளாக்கில் வசித்து வருகின்றேன். தற்சமயம் கோயம்புத்தூரில் உள்ள இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் பி. டெக்,

கெமிக்கல் இன்ஜினியரிங் மூன்றாமாண்டு படித்து வருகின்றேன். சுலோச்சனா, எனது அம்மா வழி பாட்டி. (அம்மாவின் அம்மா). இவ்வழக்கின் முதல் எதிரி என் தாயார். 2 வது எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ஜெகதீசன் எனது தகப்பனார். கடந்த 18.09.2021 அன்று என் தந்தையார் இறந்துவிட்டார். அன்று காலை நான் பணிரெண்டாம் வகுப்பு அசல் மதிப்பெண் பட்டியலை பெறுவதற்காக சாத்திப்பட்டில் உள்ள மதர் தெரசா மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு, காலை ஒன்பது மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றேன். அதன்பிறகு நான் இன்று வரை புதுப்பாளையத்தில் உள்ள என் வீட்டிற்கு செல்லவேயில்லை. என் தகப்பனார் இறந்த தகவலை என் பாட்டி சுலோச்சனா எனக்கு போன் செய்து கூறினார். என் தகப்பனார் இறந்துவிட்ட விவரத்தை மட்டுமே என்னிடம் கூறினார்கள். எப்படி இறந்தார் என்ற விவரத்தை அவர்கள் கூறவில்லை. இன்று வரை என் அப்பா எப்படி இறந்தார் என்று யாரும் எனக்கு சொல்லவில்லை.

**(இந்நிலையில், சாட்சியை கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. எனக்கு ஒரு தம்பி மற்றும் ஒரு தங்கை உள்ளனர். என் தகப்பனார் ஜெகதீசன் டிரைவராக வேலை பார்த்தார். அவர் வருமானத்தில் தான் நாங்கள் மூவரும் படித்தோம் என்றால் சரிதான். என் அம்மாவிற்கும் அப்பாவிற்குமான உறவு நிலை எப்படி இருந்தது என்றால், அவ்வப்போது சிறு சிறு சண்டைகள் வரும். என் தகப்பனாருக்கு இறுதி சடங்குகளை யார் செய்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. என்னை செய்யவிடவில்லை. சாவு வீட்டிற்கு சென்றால் சண்டை வரும், போகவேண்டாம் என எனது சித்தப்பா ராஜா (என் தாயாரின் தங்கையின் கணவர்) கூறிவிட்டார். அதனால் நான் செல்லவில்லை. என் தம்பியோ தங்கையோ இறுதி சடங்கிற்கு சென்றார்களா என்றால் இல்லை. என் தாயாரும்

என் தகப்பனாரின் இறுதி சடங்கில் பங்கெடுக்கவில்லை. கடைசியாக என்று என் தகப்பனாரை பார்த்தேன் என்றால், 18.09.2021 அன்று மார்க் ஷீட் வாங்குவதற்கு பள்ளிக்கு செல்வதற்கு முன்பு என் தகப்பனாரை பார்த்தேன். எனக்கு கார்டியனாக என் சித்தப்பா ராஜா இருப்பதனால், என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தேவைப்படவில்லை. என் படிப்பு செலவு மற்றும் கல்லூரியின் இதர செலவுகளை என் சித்தப்பா ராஜாதான் செய்து வருகிறார். என் தம்பி மற்றும் தங்கைகளின் படிப்பு மற்றும் இதர செலவுகளை என் சித்தப்பா ராஜா தான் செய்து வருகிறார். என் அம்மா (நதியா) எங்கு வசிக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை. போலிஸ் என்னை விசாரிக்கவில்லை.

3. போலிஸ் என்னை விசாரித்தார்கள் என்றும், அவ்விசாரணையில் நான், கடந்த 18.09.2021 அன்று பள்ளிக்கு சென்றுவிட்டு மதியம் மூன்றரை மணி அளவில் என் வீட்டுக்கு வந்ததாகவும், அப்போது என் வீட்டு ஹாலில் என் அப்பா போர்த்தி படுத்துக்கொண்டிருந்ததாகவும், வீட்டில் தீய்ந்த வாடை வந்ததாகவும், அது என்னவென்று என் அம்மாவிடம் நான் கேட்டதாகவும், அதற்கு என் அம்மா அப்பாவிற்கு உடம்பு சரியில்லை வாந்தி எடுத்துவிட்டார், அதனால் தான் அந்த வாடை வருகிறது என்று கூறியதாகவும், பின்னர் செல்போன் ரீசார்ஜ் செய்ய காசு வாங்கிக்கொண்டு சாத்திப்பட்டு சென்றுவிட்டு, மீண்டும் கால்மணி நேரத்தில் வீட்டுக்கு நான் வந்ததாகவும், அப்போது வீட்டில் ரத்தவாடை வீசியதாகவும், என்னவென்று நான் அம்மாவை கேட்டதாகவும், அதற்கு அம்மா அழுதுகொண்டே தனக்கும் அப்பாவிற்கும் சண்டை வந்ததாகவும், கோபத்தில் அப்பாவை மண்வெட்டியால் அடித்து கொன்றுவிட்டதாக சொன்னதாகவும், நான் உடனே அப்பாவை சென்று பார்த்தபோது, தலையில் ரத்தகாயத்துடன் இருந்ததாகவும், உடனே நான் செல்போனில் என் பாட்டி சுலோச்சனாவிற்கும், மாமாவிற்கும் போன் செய்து

தகவல் சொன்னதாகவும், பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்ததாகவும், தகவல் கிடைத்த கொஞ்ச நேரம் கழித்து என் பாட்டி சுலோச்சனாவும், மாமா புஷ்பராஜ்ம் எங்கள் வீட்டிற்கு வந்ததாகவும், பின்னர் என் மாமா முத்தரசன்குப்பத்தில் உள்ள என் சித்தப்பா வாசுதேவனுக்கு தகவல் சொன்னதாகவும், பின்னர் நாலே முக்கால் மணி அளவில் நான் என் சித்தப்பாவிற்கு போன் செய்து, என் அப்பா இறந்த தகவலை சொன்னதாகவும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் வந்ததாகவும், அவர்கள் என் அப்பா இறந்துவிட்டதை பார்த்து, அதில் ஏற்றமாட்டோம் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டதாகவும், பின்னர் உறவினரகள் வந்ததாகவும், என் சின்ன தாத்தா முருகன் காடாம்புலியூர் போலிஸ்க்கு தகவல் சொன்னதாகவும்,. பின்னர் நான் என் பாட்டி, மற்றும் மாமாவுடன் நெய்வேலி சென்றுவிட்டதாகவும், மறுநாள் போலிசார் என்னை விசாரித்ததாகவும், வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணங்களுக்காகவும்,. என் தாயாரை காப்பாற்றவும், தவறாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>நீதிமன்றக்கேள்வி</u> 1 18.09.2021 சமயத்தில் நீங்கள் எங்கு வசித்து வந்தீர்கள் ?

<u>பதில்</u> 122 ஏ , கிழக்கு தெரு, புதுப்பாளையம், சிலம்பிநாதன்பேட்டை போஸ்ட், பண்ருட்டி தாலுக்கா என்ற முகவரியில் நான் என் தாயார் நதியா, என் தம்பி, என் அப்பா ஜெகதீசன், ஆகியோர் வசித்து வந்தோம். என் தங்கை, என் தாயாரின் தங்கையான சித்தி சின்னமணி வீட்டில் இருந்தார்.

<u>நீதிமன்றக்கேள்வி</u> 2 உன் தம்பி 18.09.2021 சமயத்தில் எந்த வகுப்பில் படித்தார், எங்கு படித்தார்?

<u>பதில்</u> எட்டாம்வகுப்பினை சாத்திப்பட்டு, மதர் தெரசா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் படித்து வந்தார்.

நீதிமன்றக்கேள்வி 3 18.09.2021 அன்று நீவிர் மதிப்பெண் பட்டியல் வாங்க பள்ளிக்கு சென்றபோது உமது வீட்டில் யாரெல்லாம் இருந்தார்கள்?

பதில் என் அம்மாவும், அப்பாவும் மட்டுமே இருந்தார்கள்.

நீதிமன்றக்கேள்வி 4 18.09.2021 சமயத்தில் உமது தகப்பனார் என்ன பணி செய்தார், எங்கு பணியாற்றினார்?

பதில் சென்னையில் CAB ஓட்டி தொழில் செய்து வந்தார். அப்போது லீவில் வீட்டிற்கு வந்திருந்தார்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

4. என் அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். 18.09.2021 அன்று காலை என் தகப்பனார், நான் பள்ளிக்கு செல்லும் சமயத்தில் மது அருந்தியிருந்தாரா என்றால் இல்லை. நான் பள்ளிக்கு சென்ற பிறகு, என் தகப்பனார் எங்கு சென்றார் என்ற விவரமும், எங்கு மது அருந்தியிருந்தார் என்ற விவரமும், எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் அன்றைய தினம் அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு, சுயநினைவு இன்றி காணப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

இரண்டாவது எதிரி தரப்பில் மேற்கொள்ளப்பட்ட குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*